# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 0041/2016/ந

ஆணை எண்: 005/2017

நாள்: 09/01/2017

திரு. K.செந்திலாபதி,
368, பெரிய கடை பஜார்,
இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் - முறையீட்டு மனுதாரர்

திருமதி. P.S.தனலட்சுமி,
முன்னாள் நகர்மன்றத் தலைவர்,
இராஜபாளையம் நகராட்சி, விருதுநகர் மாவட்டம். - எதிர் மனுதாரர்

## ஆணை:

மனுதாரரது 22/01/2016 நாளிட்ட முறையீட்டு மனு 27.01.2016 அன்று இம்முறை மன்ற நடுவத்திற்கு வரப்பெற்று எண்:0041/2016 ஆக பதிவு செய்யப்பட்டது.

2. மேற்படி முறையீட்டு மனுவில், முறையீட்டு மனுதாரர் கீழ்க்கண்டுள்ள புகார்களை தெரிவித்துள்ளார்:-

(i) இராஜபாளையம் நகராட்சியில் தலைவர் (எதிர்மனுதாரர்) திருமதி. P.S. தனலட்சுமிக்கு பதிலாக அவரது கணவரே நகராட்சியின் நிர்வாகத்தில் தலையிட்டு முடிவு எடுக்கிறார்;

(ii) நகராட்சி வார்டுகளில் திறந்து வைக்கப்படும், அனைத்து கல்வெட்டுகளிலும் P.S. தனலட்சுமிக்குப் பதிலாக அவர் கணவர் பெயரான செல்வ சுப்பிரமணிராஜா தனலட்சுமி என்று உள்ளது;

(iii) அனைத்து ஒப்பந்த பணிகளும் அவரால் தான் விடப்படுகிறது. தரம் இல்லாமல் செய்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது;

(iv) இராஜபாளையம் ரயில்வே பீடர் ரோடு முதல் காந்திசாலை வரையிலான சிமெண்ட் சாலை சேதமின்றி நல்ல நிலையிலிருந்தும் பிளவர் பிளாக் கல் பதிக்க ரூ.1 கோடி டெண்டர் திரு. குழந்தைவேல் என்பவருக்கு வழங்கப்பட்டது. சிமெண்ட் சாலையின் மேலேயே பிளவர் பிளாக் கல்லை தரமில்லாமல் பதித்துள்ளார். இதனால் மழைநீர் பூமிக்குள் சென்று நிலத்தடி நீர் கிடைக்க வாய்ப்பு இல்லாமல் போனது;

(V) பல வார்டுகளில் நகர் மன்ற தலைவியின் கணவர் துணையுடன் தண்ணீர் குழாய் இணைப்பு நகராட்சி தீர்வை இன்றி வழங்கப்படுவதால் நகராட்சிக்கு நிதி இழப்பு;

(Vi) இராஜபாளையம் நீர்த் தேக்கத்தில் மீன் குஞ்சுகளை நகர் மன்றத் தலைவியின் கணவர் துணையுடன் வளர்த்து மீன் பிடிக்கப்பட்டு வந்துள்ளது. ஆய்வின்போது வலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன;

(vii) தெருக்களில்/சாலைகளில் தேங்கும் நீர் மற்றும் கழிவுநீர் தேங்குமிடங்களில் கிருமிநாசினி பவுடருக்கு (பிளீச்சிங் பவுடர்) பதில் கோலப் பொடிகளையும், சுண்ணாம்பு பவுடர்களையும் கலந்தே தெளிப்பது. இதன் ஒப்பந்ததாரர் திரு.அர்சுனராஜா நகர் மன்ற தலைவியின் கணவருக்கு நெருங்கிய சொந்தமாக உள்ளார். பிளீச்சிங் பவுடர் கொள்முதலில் முறைகேடுகள் நடந்துள்ளது;

(viii) 2011 முதல் 2015 வரை அனைத்து வகை டெண்டர்களிலும் முறைகேடு நடந்துள்ளது;

(vii) பொதுப் பிரிவிற்கான எழுதுப் பொருள்/அச்சுப்பொருள் கொள்முதலில் முறைகேடு;

(X) நகராட்சிக்கு சொந்தமான INTC நகரில் உள்ள விளையாட்டு மைதானம் வார்டு-1, பிளாக்-18, T.S.No.78 மகாதேவன் மனைவி சக்திபிரித்தி பெயரிலும், வார்டு-1, பிளாக் -18, T.S.No.73/1, 73/2 வெங்கடேஸ்வரராஜா மனைவி லதா பெயரிலும் மற்றும் சங்கரன் கோவில் முக்கு, ஜவஹர் மைதானத்துக்கு வடபக்கம் உள்ள காலி இடம் தனி நபருக்கு வாங்கப்பட்டுள்ளது. இது போன்றே பல இடங்களும் தனி நபரின் பெயரில் வாங்கப்பட்டுள்ளது.

3. மேற்படி புகார்கள் தொடர்பான அறிக்கையினை அனுப்பி வைக்குமாறு அறிவிப்பாணை எண்:0041/16 நாள்:08.02.2016ன் மூலம் ஆணையிடப்பட்டது.

4. மேலும், 11.05.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு மனுதாரருக்கு அழைப்பாணை (அ.ம.எண்.0041/16/ந நாள்:01.04.2016) அனுப்பப்பட்டது. மனுதாரர் தனது 9.5.2016 நாளிட்ட கடிதத்தில் தனது உடல் நிலை காரணங்களால் வர இயலாததால் மறு தேதி நிர்ணயிக்க கேட்டுக் கொண்டார். கோரிக்கை ஏற்கப்பட்டு 10.06.16 அன்று விசாரணை நிர்ணயிக்கப்பட்டு மனுதாரருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அதன்படி 10.06.16 அன்று மனுதாரர் ஆஜராகி தனது வாக்குமூலத்தினை தாக்கல் செய்தார். தனது முறையீட்டு மனுவில் கூறிய புகார்களை மீண்டும் வலியுறுத்தினார். மனுதாரர் தரப்பிலான சாட்சி திரு. எஸ். ராமசாமி என்பவரும் ஆஜராகி மனுதாரரது வாக்குமூலத்தையே தனது வாக்குமூலமாக மேலொப்பம் செய்தார். ஆனால், புகார்கள் தொடர்பான ஆதாரங்கள் எதுவும் மனுதாரராலோ அல்லது அவர் தரப்பு சாட்சியாலோ தாக்கல் செய்யப்படவில்லை.

5. இராஜபாளையம் நகராட்சி ஆணையரது அறிக்கை ந.க.எண்.இ1/6767/16, நாள்:23.8.2016, 06.09.2016 அன்று வரப்பெற்று பரிசீலிக்கப்பட்டது. மேற்படி அறிக்கையில் கீழ்க்கண்டவாறு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன:-

(1) இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இரயில்வே பீடர் ரோட்டில் ஏற்கனவே இருந்த சிமெண்ட் சாலை சுமார் 62 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. மேற்படி சாலையில் பல்வேறு இடங்களில் வெடிப்பு ஏற்பட்டதால் மேற்படி சாலையில் நடைபாதை (Foot Path)யுடன்

கூடிய பேவர் பிளாக் சாலை தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2013-14ன் கீழ் ரூ.86.00 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க நகர்மன்றத்தின் 30.9.2013-ஆம் நாளிட்ட தீர்மானம் எண்.600ல் அனுமதி பெற்று பின்னர் அதற்கான உரிய நிர்வாக அனுமதி தொழில் நுட்ப அனுமதி பெற்று முறையான ஒப்பந்தப்புள்ளி பெற்று பணி கடந்த 03.02.2015 அன்று துவங்கப்பட்டது. இந்நிலையில் 15.2.2015 அன்று மாவட்ட ஆட்சியர், விருதுநகர் அவர்களுக்கு வரப்பெற்ற புகாரின் பேரில் பணி நிறுத்தம் செய்யப்பட்டது. அதன் பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் திருநெல்வேலி மண்டல நிர்வாக இயக்குநர் அவர்களை ஸ்தல ஆய்வு செய்து அறிக்கை வழங்க கேட்டுக் கொண்டதன் பேரில் 16.2.15 அன்று மண்டல செயற் பொறியாளர் திருநெல்வேலி அவர்களால் ஸ்தல ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட ஆய்வறிக்கை அடிப்படையில், மேற்படி சாலை அமைத்து 60 ஆண்டுகளுக்கு மேலாகி மோசமான நிலையில் இருந்தமையாலும், அந்த ரோட்டில் மூன்று முக்கிய பள்ளிகளை சேர்ந்த சுமார் 7000 மாணவ, மாணவியர்கள் பயன்படுத்த நடைபாதையுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைப்பது அவசியமானது என குறிப்பிட்டு திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடிதம் ந.க.எண்.53/2010/ஆ1, நாள்:16.10.15 வாயிலாக அனுமதி வழங்கியதின் பேரில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பணி தொடர அனுமதிக்கப்பட்டது. தொடர்ந்து பணி மேற்கொண்டு வந்த நிலையில் அந்த சாலையில் அரசு மேல் நிலைப் பள்ளி முதல் தென்காசி ரோடு சந்திப்பு வரை பேவர் பிளாக் சாலை அமைக்க ரூ.33.00 லட்ச மதிப்பீட்டில் பொது நிதியின் கீழ் நகர் மன்றம் தனது தீர்மானம் எண்.30, நாள்:27.2.15ல் அனுமதி வழங்கியது. மேற்கண்ட இரண்டு பணிகளும் டிசம்பர் 2015ல் முழுமையாக முடிக்கப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. முன்னதாக மேற்படி பணிக்கு பயன்படுத்த கட்டுமானப் பொருட்கள் மாதிரிகள் தரப்பரிசோதனைக்கு அரசின் மண்டல பரிசோதனை மையம் மதுரைக்கு அனுப்பி உரிய சான்று பெற்று அவை தரமானது என்று உறுதி செய்யப்பட்டுள்ளது. ஏற்கனவே மேற்படி சாலை கிழக்கிலிருந்து மேற்கு நோக்கிய முகமாக இயற்கையான சாய்வு (natural slope) மட்டத்தில் சிமெண்ட் சாலை அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால் மேற்படி பகுதியில் மழைநீர் பூமிக்குள் செல்ல வழியில்லை.

(2) நகர்மன்ற பணிகளுக்கான நினைவு கல்வெட்டுகளில் நகர்மன்ற தலைவர் திருமதி. பி. எஸ். தனலட்சுமி செல்வ சுப்பிரமணிய ராஜா என்ற பெயரில் பொறிக்கப்பட்டது.

(3) 2014-15ம் ஆண்டு இந்நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் நோயினால் சில குழந்தைகள் இறந்து விட்டதால், அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை -5 அவர்களின் 17.12.15ம் தேதிய கடித எண்.4433/2015/ஜெ1-ன் படியும், இந்நகர்மன்றத் தீர்மான எண்.435, நாள்:30.12.14 மற்றும் இந்நகர் மன்றத் தீர்மான எண்.243, நாள்:23.4.15ன் படியும் பொருட்கள் வாங்கப்பட்டுள்ளன. இதில் முறைகேடுகள் எதுவும் இல்லை. பொருட்கள் வாரியாக செலவின தொகை விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) 2011-ஆம் ஆண்டு முதல் 2015 வரை பெறப்பட்டுள்ள பிளீச்சிங் பவுடர் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவுக்கு வைத்து மன்றம் முடிவு செய்த பின்னரே குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள நிறுவனத்தாருக்கு உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

(5) இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் கணினிக்கு தேவையான டோனர்கள், அரசு கூட்டுறவு அச்சகத்திலிருந்து வாங்கிட செலவுத் தொகைக்கு மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்பு ஒப்பந்தப்புள்ளிகள்/விலைப்புள்ளிகள் பெறப்பட்டும், குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு விநியோகம் செய்ய மன்றத்தின் ஒப்புதல் பெற்று முறையாக சப்ளை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு அச்சகத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் முறைகேடு ஏதுமில்லை. இந்நகராட்சி பெரு நகராட்சி ஆகும். எனவே, எழுது பொருட்கள்

மட்டுமல்லாமல் கணினி உபயோகத்திற்கு தேவையான டோனர் மற்றும் ரிப்பன் சேர்த்து ரூ.20,00,000/- (ரூபாய் இருபது லட்சம்)க்கு கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(6) பொறியியல் பிரிவில் 2011 முதல் 2015 வரையில் நடைபெற்ற ஒப்பந்தப் புள்ளிகளில், ஒரு சில பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மதிப்பீட்டை விட 5 சதவீதத்திற்கு உட்பட்டு அதிகமாக கொடுக்கப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் நகர்மன்றத்தின் அனுமதியின் பேரிலும், பொறியியல் கையேடு அத்தியாயம் 2.7.2ன் படி முதல் அழைப்பிலேயே 5 சதவீதத்திற்கு அதிகமாகவும், மூன்று அழைப்பிற்கு மேற்பட்டால் 10 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் மேற்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றமே முடிவு செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட 5 சதவீதத்திற்குட்பட்டு கொடுக்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப் புள்ளிதாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடு ஏதுமில்லை.

(7) மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் ஐ.என்.டியுசி நகரில் வார்டு-1 பிளாக் 18, நகரளவு எண்.78 மற்றும் நகரளவு எண்.73/1, 73/2 ஆகிய புல எண்கள் ஆரம்ப நகரளவு மற்றும் துணை நகரளவு ஆவணங்களில் தனியார் பெயரிலேயே இருந்து வருவதுடன், விளையாட்டு மைதானம் என பதிவு ஏதுமில்லை. ஐ.என்.டியுசி நகர், ஊரமைப்புத்துறை இயக்குநர் மூலம் அனுமதி வழங்கப்பட்ட மனைப் பிரிவு எண்.108/82 ஆகும். மேற்படி மனைப் பிரிவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் பள்ளி மற்றும் விளையாடுமிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு 1982ல் அமைந்துள்ளதால் மனைப்பிரிவில் அமைந்துள்ள பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சிக்கு ஒப்படைக்கவில்லை. 1992-ம் வருடத்திற்குப் பின் அமைக்கப்பட்ட மனைப்பிரிவிலுள்ள பொது உபயோக இடங்கள் மட்டுமே நகராட்சி தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிட்டபடி நகராட்சி மூலம் ஏதும் வழங்கப்படவில்லை.

மேலும், சங்கரன் கோவில் முக்கு ஜவஹர் மைதானம் வடபுறமுள்ள இடம் வருவாய்த் துறைக்கு பாத்தியப்பட்ட இடமாகும். மேற்படி இடமும் நகரளவு ஆவணங்களில் வருவாய்த் துறைக்கு பாத்தியப்பட்ட இடமாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட நகரளவு ஆவண நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. ஜவஹர் மைதானத்திற்கு வடக்கில் உள்ள மனுதாரர் புகார் தெரிவித்துள்ள இடத்தில் தனிநபர் எவராலும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை. மேலும் மேற்படி இடத்தில் பொது மக்களுக்கு அடிப்படை தேவையான கழிப்பறை மற்றும் நகராட்சியின் வசூல் மையம் அமைக்கப்பட்டுள்ளது."

மேற்படி அறிக்கையுடன் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரது 16.02.2015 நாளிட்ட கடிதம் மற்றும் டவுன் சர்வே ரிஜிஸ்டரின் நகல் ஆகியவையும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

6. இம்முறை மன்ற நடுவ அசல் மனு எண்.041/16/ந நாள்: 9.9.2016ன்படி நகராட்சி ஆணையர் மற்றும் எதிர்மனுதாரருக்கு 17.10.16 விசாரணைக்கான அழைப்பாணை அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி விசாரணை, நடைபெறவிருந்த உள்ளாட்சி சாதாரணத் தேர்தலைக் கருதி 15.11.16க்கு மறு நிர்ணயம் செய்யப்பட்டது. 15.11.16 அன்று இராஜபாளையம் நகராட்சி ஆணையர் ஆஜராகி கீழ்க்கண்டவாறான தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:-

"23.8.2016ல் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

3.3.2015ல் திரு. குழந்தைவேலு என்பவருக்கு ரயில்வே பீடர் முதல் காந்தி சிலை வரையிலான சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பணி ஆணை நகர்மன்ற ஒப்புதல் பெற்று உரிய முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அதில் மிகக் குறைவாக குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு பணிக்கான ஆணை வழங்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியருக்கு இதே மனுதாரர் ஒரு புகார் மனு அனுப்பினார். மாவட்ட ஆட்சியர் அவர்களால் திருநெல்வேலி மண்டல நகராட்சிகளின் நிர்வாக இயக்குநரை அனுப்பி ஸ்தல ஆய்வு

செய்து அறிக்கை வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது. 16.6.2015 அன்று மண்டல செயற் பொறியாளரால் ஸ்தல ஆய்வு செய்யப்பட்டு அவருடைய ஆய்வறிக்கையின் அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பணி தொடர அனுமதிக்கப்பட்டது. இதற்குரிய தரச்சான்று அரசின் மண்டல பரிசோதனை மையம், மதுரைக்கு அனுப்பி பெறப்பட்டது.

தண்ணீர் குழாய் இணைப்புகள் பெறுவோர் ஆன்லைன் மூலம் உரிய முன்வைப்புத் தொகை செலுத்தி பதிவு செய்கிறார்கள். உரிய கட்டணம் செலுத்திய பின்பு இணைப்பு வழங்கப்படுகிறது.

இராஜபாளையம் நீர்த் தேக்கத்தில் திருட்டுத்தனமாக மீன் பிடிப்பது தொடர்பாக நகராட்சி ஆணையர் நேரில் பார்த்த போது அங்கு மீன்பிடி வலைகள் கைப்பற்றப்பட்டது மீன் பிடிப்பவர்கள் ஓடிவிட்டனர். காவல் நிலையத்தில் நகராட்சி பொறியாளரால் புகார் அளிக்கப்பட்டது. அதற்கு பின் நீர்த் தேக்கத்தில் நீர் இல்லாததால் மீன்கள் இல்லை.

பிளீச்சிங் பவுடர் வாங்கியதில் முறைகேடு நடக்கவில்லை. பிளீச்சிங் பவுடரில் சுண்ணாம்பு பவுடர் உரிய சதவீதத்தில் கலந்து தெளிப்பது அனுமதிக்கப்பட்டதாகும். ஆனால் கோலப்பொடி எதுவும் போடப்படவும், கலக்கவும் இல்லை. முந்தைய கோப்புகளை பரிசீலித்த போது உரிய விதிகளின்படி டெண்டர் கோரி இறுதி செய்யப்பட்டு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

1992 முதலே பொது காரியங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை தானமாக பெறும் வழக்கம் இருந்து வருகிறது. அதற்கு முன்பு அந்த பழக்கமில்லை. பொது நிலங்களை ஒதுக்க திரு. மகாதேவன் சக்தி குறித்து அடங்கலில் உள்ளது. சங்கரன் கோவில் முக்கு ஜவகர் மயானத்திற்கு சொந்தமான இடம் யார் பெயரிலும் இல்லை. அடங்கல் நகல் சரிபார்க்கப்பட்டது."

7. மேலும் இராஜபாளையம் நகராட்சி ஆணையரது பத்திவாரியான பதிலறிக்கையில் (15.11.16) கீழ்க்கண்டவாறு விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(1) தீர்மானம் நிறைவேற்றும் பணி மட்டும் நகர் மன்றத்தைச் சார்ந்தது. நகர்மன்றக் கூட்டம் நகர்மன்றத் தலைவரால் தான் கூட்டப்படுகிறது. நகர்மன்ற கூட்ட அஜெண்டாவும் நகர்மன்றத் தலைவர் மூலமாக தான் நகர்மன்ற உறுப்பினருக்கு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், தீர்மானத்தை செயல்படுத்தும் அதிகாரம் நகராட்சி ஆணையாளருக்கு மட்டுமே உள்ளது. நகர்மன்றத் தலைவரால் நிர்வாகத்தில் தலையிட முடியாது. எவ்வித முடிவுகளும் எடுக்க இயலாது. நகர்மன்றத் தலைவருக்கே நிர்வாகத்தில் தலையிட இயலாத நிலையில் நகர்மன்றத் தலைவரின் கணவருக்கு நிர்வாகத்தில் முடிவு எடுக்க எவ்வித அதிகாரமும் இல்லை. அவ்வாறு நகர்மன்றத் தலைவரின் கணவர் தலையிடவும் இல்லை. எனவே, இது முற்றிலும் ஆதாரமற்ற பொய்யான புகாராகும்.

(2) இராஜபாளையம் நகராட்சி வார்டுகளில் திறந்து வைக்கப்படும் அனைத்து கல்வெட்டுகளிலும் பி.எஸ். தனலட்சுமி செல்வ சுப்பிரமணிய ராஜா என்று தான் எழுதப்பட்டுள்ளது. புகைப்பட ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது. எனவே, புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது முற்றிலும் உண்மைக்கு புறம்பானது.

(3) இராஜபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட இரயில்வே பீடர் ரோட்டில் ஏற்கெனவே இருந்த சிமெண்ட் சாலை சுமார் 62 ஆண்டுகளுக்கு முன் அமைக்கப்பட்டது. மேற்படி சாலையில் பல்வேறு இடங்களில் வெடிப்பு ஏற்பட்டதால் மேற்படி சாலையில் நடைபாதையுடன் (foot path) கூடிய பேவர் பிளாக் சாலை தமிழ்நாடு நகர்ப்புற சாலை மேம்பாட்டுத் திட்டம் 2013-14ன் கீழ் ரூ.86.00 லட்சம் மதிப்பீட்டில் அமைக்க நகர் மன்றத்தின் 30.9.2013–ஆம் நாளிட்ட தீர்மான எண்600ல் அனுமதி பெற்று பின்னர் அதற்கான உரிய நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு விவரம் நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டு முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள டெண்டர்தாரருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி கடந்த 3.2.2015 அன்று துவங்கப்பட்டது. புகார்தாரர் தெரிவித்துள்ளது போல் நேரடியாக நகராட்சி நிர்வாகத்தால் திரு. குழந்தைவேலு ஒப்பந்ததாரருக்கு பணி

ஒப்படைக்கப்படவில்லை. இந்நிலையில் கடந்த 15.2.2015 அன்று மாவட்ட ஆட்சியர், விருதுநகர் அவர்களுக்கு வரப்பெற்ற புகாரின் பேரில் பணி நிறுத்தம் செய்யப்பட்டது. அதன்பின்னர் மாவட்ட ஆட்சியர் அவர்களை திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களை ஸ்தல ஆய்வு செய்து அறிக்கை வழங்க கேட்டுக் கொண்டதன் பேரில் 16.2.2015 அன்று மண்டல செயற்பொறியாளர் திருநெல்வேலி அவர்களால் ஸ்தல ஆய்வு செய்யப்பட்டு வழங்கப்பட்ட ஆய்வறிக்கை அடிப்படையில் மேற்படி சாலை அமைத்து 60 ஆண்டுகளுக்கு மேலாகி மோசமான நிலையில் இருந்தமையாலும், அந்த ரோட்டில் மூன்று முக்கிய பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 7000 மாணவ, மாணவியர்கள் பயன்படுத்த நடைபாதையுடன் கூடிய பேவர் பிளாக் சாலை அமைப்பது அவசியமானது என குறிப்பிட்டு திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், கடிதம் ந.க.எண்.53/2010, ஆ1, நாள் 16.2.2015 வாயிலாக அனுமதி வழங்கியதன் பேரில் மாவட்ட ஆட்சியர் அவர்களால் பணி தொடர அனுமதிக்கப்பட்டதினைத் தொடர்ந்து மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு தரமானதாகவும், நல்ல முறையிலும் முடிக்கப்பட்டுள்ளது. சாலைகள் நல்லமுறையிலும், தரமானதாகவும் அமைக்கப்பட்டதற்கான பரிசோதனை சான்றிதழும் உள்ளது. எனவே, புகார் மனுவில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் ஆதாரமற்ற பொய்யான புகார் ஆகும்.

(4) நகராட்சி அனுமதியின்றி குடிநீர் குழாய் இணைப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை. நகராட்சியில் பொது மக்களால் நேரடியாக விண்ணப்பிக்கப்பட்டு உரிய முன்வைப்புத் தொகை மற்றும் மேற்பார்வை கட்டணம் செலுத்தப்பட்ட பின்னர் தான் இணைப்புகள் வழங்கப்படுகிறது. உரிய பதிவேடு உள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் குடிநீர் குழாய் இணைப்புகள் முறையாக வழங்கப்பட்டு உரிய கட்டணம் வசூல் செய்யப்பட்டு வரப்படுகிறது. நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதுமில்லை. எனவே, புகார் மனுவில் தெரிவித்துள்ளது முற்றிலும் ஆதாரமற்ற பொய்யான விவரமாகும்.

(5) இராஜபாளையம் நகராட்சிக்கு சொந்தமான கோடை குடிநீர் தேக்கத்தில் பொது மக்களின் பயன்பாட்டிற்காக குடிநீர் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. அதே சமயம் இரவு நேரங்களில் சில சமூக விரோதிகள் சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபட்டு குடிநீரை பாழ்படுத்தி வருவதாக குடிநீர் தேக்க இரவு பொறுப்பு காவலர் அறிக்கை செய்ததின்பேரில் அப்பகுதியில் அடையாளம் தெரியாத மூன்று நபர்கள் மீன் பிடித்து கொண்டிருந்ததாகவும், இரவு காவலர் அப்பகுதிக்கு விரைந்து செல்லும் முன்னர் தப்பி ஓடிவிட்டதாகவும் அறிக்கை செய்ததின் பேரில் சட்ட விரோத சம்பவத்தில் ஈடுபட்டு குடிநீரை மாசுபடுத்திவரும் குற்றவாளிகளை கண்டுபிடித்து தக்க குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள 26.12.2015 அன்று இராஜபாளையம் நகர் வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்களுக்கு புகார் கடிதம் அனுப்பப்பட்டது. ஆகஸ்ட் '2016 முதல் கோடை குடிநீர் தேக்கத்தில் குடிநீர் ஏதுமின்றி தற்போது வறண்டு உள்ளது.

(6) புகாரில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் முற்றிலும் ஆதாரமற்ற பொய்யான தகவல்கள் ஆகும். இந்நகராட்சி குடிநீர் விநியோக பணிக்குத் தேவையான பிளீச்சிங் பவுடர்கள் வாங்குவதற்கு தினசரி நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி முறையாகப் பெற்று மன்றத்தின் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு சப்ளை உத்திரவு வழங்கப்பட்டு பொருட்கள் நல்ல முறையிலும் தரமானதாகவும் பெறப்பட்டுள்ளது. மேலும், பொது சுகாதாரப் பணிக்குத் தேவையான சுண்ணாம்பு தூளும் டெண்டர் முறையில் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப் புள்ளிதாரருக்கு உத்திரவு வழங்கப்பட்டு தரமான பொருட்களே வாங்கப்பட்டுள்ளது. புகார்தாரர் சுண்ணாம்புத் தூள் மற்றும் பிளீச்சிங் பவுடரின் உபயோகத் தன்மை தெரியாமல் வேண்டுமென்றே அளித்துள்ள பொய்யான புகாராகும்.

(7) இந்நகராட்சி பகுதியில் டெங்கு மற்றும் வைரஸ் காய்ச்சல் நோயினால் குழந்தைகள் உயிரிழப்பு ஏற்பட்டு அசாதாரண சூழ்நிலையில் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், அரசு முதன்மைச் செயலாளர்,

நகராட்சி நிர்வாகம், நகராட்சி நிர்வாக இயக்குநர், மாவட்ட ஆட்சியர், இயக்குநர் (பொது சுகாதாரம்), சென்னை, திருநெல்வேலி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் சிவகாசி இணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் ஆகியோர் உத்தரவிட்டதன் அடிப்படையில் அவசர நிலைச் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களது ந.க.எண்.4433/15/ஜே1, நாள்:17.2.2015ல் செலவினங்கள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரிலும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்திரவின்படியும், சிவகாசி இணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) அவர்களின் கடிதம் ந.க.எண்.114/சி4/2014, நாள்:30.12.2014ன் படியும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் உத்திரவு ந.க.எண்:பி1/3498/2010, நாள்:31.12.14ன் படியும் இந்நகர்மன்றத் தீர்மான எண்:243 நாள்:21.4.2015ன் படியும் அரசு விதிமுறைகளுக்குட்பட்டு அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களில் இருந்து விலைப் புள்ளிகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் முறையாகப் பெற்று நகராட்சி ஆணையரால் பணி உத்திரவு வழங்கப்பட்டு செலவினங்கள் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் விதி மீறல்கள் ஏதுமில்லை. முறைகேடுகள் நிகழவில்லை.

மேலும், 14.8.2014 முதல் 18.3.2015 வரை மேற்கொள்ளப்பட்ட ரூ.1,23,07,813/-க்கான செலவின விவரங்களின் பட்டியலும் தரப்பட்டுள்ளது.

(8) சுகாதாரப் பிரிவில் 2011 முதல் 2015 வரையிலான அனைத்து வகை டெண்டர்களிலும் முறைகேடு நடந்துள்ளதாக புகாரில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் அனைத்தும் முற்றிலும் ஆதாரமற்ற பொய்யான தகவல்கள் ஆகும். இந்நகராட்சி குடிநீர் விநியோக பணிக்கு தேவையான பிளீச்சிங் பவுடர்கள் வாங்குவதற்கு தினசரி நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி முறையாகப் பெற்று மன்றத்தின் அனுமதி பெற்று குறைந்த ஒப்பந்தப் புள்ளிதாரருக்கு சப்ளை உத்திரவு வழங்கப்பட்டு பொருட்கள் நல்ல முறையிலும், தரமானதாகவும் பெறப்பட்டுள்ளது. பெறப்பட்ட பொருட்களுக்கு தரச்சான்றும் பெறப்பட்டுள்ளது. மேலும், பொது சுகாதாரப் பணிக்குத் தேவையான சுண்ணாம்புத் தூளும் டெண்டர் முறையில் பெறப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு உத்திரவு வழங்கப்பட்டு தரமான பொருட்களே வாங்கப்பட்டுள்ளது.

(9) இந்நகராட்சிக்குத் தேவையான எழுது பொருட்கள் மற்றும் கணினிக்குத் தேவையான டோனர்கள் அரசு கூட்டுறவு அச்சகத்திலிருந்து வாங்கிட செலவுத் தொகைக்கு மன்றத்தின் ஒப்புதல் பெற்ற பின்பு ஒப்பந்தப் புள்ளிகள்/ விலைப்புள்ளிகள் பெறப்பட்டும், குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு விநியோகம் செய்ய மன்றத்தின் ஒப்புதல் பெற்று முறையாக சப்ளை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. அரசு கூட்டுறவு அச்சகத்திலிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இதில் முறைகேடு ஏதுமில்லை. இந்நகராட்சி பெருநகராட்சி ஆகும். எனவே, எழுது பொருட்கள் மட்டுமில்லாமல் கணினி உபயோகத்திற்குத் தேவையான அனைத்துப் பொருட்களும் சேர்த்து மன்ற அனுமதி பெறப்பட்ட தொகைக்குள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. எனவே புகார்தாரர் தெரிவித்துள்ளது ஆதாரமற்ற பொய்யான புகார் ஆகும்.

(10) பொறியியல் பிரிவில் 2011 முதல் 2015 வரையில் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகளில் ஒரு சில பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் மதிப்பீட்டை விட 5 சதவீதத்திற்கு மேல் உள்ளன. இருப்பினும் மதிப்பீட்டை விட கூடுதலாக 5 சதவீதத்திற்குள் கொடுக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் நகர்மன்றத்தின் அனுமதியின் பேரில் வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. பொறியியல் கையேடு அத்தியாயம் 2.7.2ல் முதல் அழைப்பிலேயே 5 சதவீதத்திற்கு அதிகமாகவும் மூன்று அழைப்பிற்கு மேற்பட்டால் 10 சதவீதத்திற்கு அதிகமாக இருக்கும் பட்சத்தில் மேற்படி பணியின் அவசியத்தை முன்னிட்டு நகர்மன்றமே முடிவு செய்யலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஒப்பந்தப் புள்ளியானது மதிப்பீட்டை விட கூடுதலாக மற்றும் 5 சதவீதத்திற்கு

உட்பட்டு கொடுக்கப்பட்ட குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரருக்கு நகர் மன்றத்தின் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதில் முறைகேடு ஏதுமில்லை.

(11) மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் ஐஎன்டியுசி நகரில் வார்டு1, பிளாக் 18, நகரளவு எண். 78 மற்றும் நகரளவு எண்:73/1, 73/2, ஆகிய புல எண்கள் ஆரம்ப நகரளவு மற்றும் துணை நகரளவு ஆவணங்களில் தனியார் பெயரிலேயே இருந்து வருகிறது. மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு விளையாட்டு மைதானம் என நகரளவை ஆவணங்களில் பதிவு ஏதும் இல்லை. ஐஎன்டியுசி நகர் ஊரமைப்புத் துறை இயக்குநர் மூலம் அனுமதி வழங்கப்பட்ட மனைப்பிரிவு எண் 108/82 ஆகும். மேற்படி மனைப்பிரிவில் மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடம் பள்ளி மற்றும் விளையாடுமிடத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு 1982ல் அமைந்துள்ளதால் மனைப்பிரிவில் அமைந்துள்ள பூங்கா மற்றும் பொது உபயோக இடங்களை நகராட்சிக்கு ஒப்படைக்கப்படவில்லை. 1992-ம் வருடத்திற்கு பின் அமைக்கப்பட்ட மனைப் பிரிவிலுள்ள பொது உபயோக இடங்கள் மட்டுமே நகராட்சிக்கு தானப் பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மனுதாரர் குறிப்பிட்டபடி நகராட்சி மூலம் ஏதும் வழங்கப்படவில்லை. மேலும், சங்கரன் கோவில் முக்கு ஜவகர் மைதானம் வடபுறமுள்ள இடம் வருவாய்த் துறைக்கு பாத்தியப்பட்ட இடமாகும். மேற்படி இடமும் நகரளவு ஆவணங்களில் வருவாய்த்துறைக்கு பாத்தியப்பட்ட இடமென குறிப்பிடப்பட்டுள்ளது. நகரளவு ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன. ஜவகர் மைதானத்திற்கு வடக்கிலுள்ள மனுதாரர் புகார் தெரிவித்துள்ள இடத்தில் தனி நபர் எவராலும் ஆக்கிரமிப்பு செய்யப்படவில்லை. மேலும், மேற்படி இடத்தில் பொது மக்களுக்கு அடிப்படைத் தேவையான கழிப்பறை, சத்துணவுக் கூடம் மற்றும் நகராட்சி வசூல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட இடங்களைத் தவிர்த்து மீதமுள்ள 0.0968.0 ச.மீ. காலியிடம் தடை செய்யப்பட்ட பகுதி (முத்தாலம்மன் கோவில்) என நகரளவு ஆவணங்களில் பதிவாகி உள்ளது.

மேற்கண்டவாறான நகராட்சி ஆணையரது விரிவான பதிலறிக்கையுடன் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல்கள் மற்றும் புகைப்படங்கள் இம்முறை மன்ற நடுவத்தின் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

8. மேலும், 15.11.2016 அன்று இம்முறை மன்ற நடுவம் கோரிய கூடுதல் விவரங்கள் குறித்தும் இராஜபாளையம் நகராட்சி ஆணையரால் அறிக்கை ந.க.எண்.இ1/6767/2016, நாள்:21.11.16ல் கீழ்க்கண்டவாறான விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன:-

(i) திரு. கே. செந்திலாபதி என்பவர் முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்த புகார் மனுவில் இணைத்திருந்த இரயில்வே பீடர் ரோடு பேவர் பிளாக் சாலை பணி குறித்த புகைப்படம் குறித்து அளிக்கப்பட்ட விளக்கம்:-

"புகார்தாரர் இணைத்த புகைப்படத்தில் இரயில்வே பீடர் ரோட்டில் மேல் நிலைப் பள்ளி அருகில் அமைக்கப்பட்ட நடைபாதை அருகில் கட்டுமான இடிபாடு பொருட்கள் இருந்தது. சாலை பணி மேற்கொள்வதற்கு முன்பாக பள்ளி நுழைவாயில் சாலை மட்டத்திற்கு சாய்வு தளம் அமைக்கப்பட்டிருந்தது. பின்னர் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்ட பின்னர் பள்ளியின் நுழைவு பகுதி பள்ளமாகிவிட்டது. இதனால் மழைநீர் பள்ளி வளாகத்திற்குள் புகுந்துவிடும் என்பதால் பள்ளி நிர்வாகம் நுழைவு வாயில் சாய்வு தளத்தை இரயில்வே பீடர் ரோட்டின் புதிய மட்டத்திற்கு ஏற்ப உயர்த்தி அமைத்தது. அப்போது அகற்றப்பட்ட பழைய இடத்தில் எடுக்கப்பட்ட கட்டுமானப் பொருட்களின் ஒரு பகுதி சாலையில் கொட்டப்பட்டிருக்கும் போது புகார்தாரரால் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது அவ்வாறான இடித்து எடுக்கப்பட்ட பொருட்கள் அந்த இடத்தில் இல்லை, சாலையில் எவ்வித பழுதும் ஏற்படவில்லை. தற்போதைய புகைப்பட ஆதாரம் இணைக்கப்பட்டுள்ளது.

(ii) <u>திரு. அர்சுன் ராஜா என்பவருக்கு வழங்கப்பட்ட டெண்டர் குறித்த விளக்கம்:-</u>

நகராட்சி பொறியியல் பிரிவில் குடிநீர் சுத்திகரிப்பு பணிக்குத் தேவையான பிளீச்சிங் பவுடர் கொள்முதல் செய்வதற்கு திரு. அர்சுன் ராஜா என்ற பெயரில் 2014-2015 மற்றும் 2015-2016-ஆம் நிதியாண்டில் எந்தவிதமான கொள்முதல் ஒப்பந்தமும் செய்யப்படவில்லை. ஆனால், 2016-2017-ஆம் ஆண்டில் திரு. எஸ். ஏ. அர்சுன்ராஜா என்பவர் ஸ்டிக்வெல் என்ற பெயரில் ஒப்பந்தப்புள்ளியில் கையொப்பமிட்டு சமர்ப்பித்துள்ளார். மேற்படி நிறுவனமே குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனமாகவே இருப்பதால் மேற்படி நிறுவனத்தின் பெயரில் வேலை உத்தரவு வழங்கப்பட்டதில் திரு. எஸ். ஏ. அர்சுன் ராஜா என்பவரால் கையொப்பமிட்டு பெறப்பட்டுள்ளது.

மேற்படி விளக்கங்களுடன் கடந்த மூன்றாண்டுகளில் மொத்தம் ரூ.5,59,859/-க்கு பிளிச்சிங் பவுடர் தவணை முறையில் கொள்முதல் செய்யப்பட்ட விவரம் மற்றும் நகர் மன்றத் தீர்மான எண் போன்ற அனைத்து விவரங்களடங்கிய பட்டியல் விவரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் சம்பந்தப்பட்ட கோப்புகளின் குறிப்பு கோப்பு நகல்கள், வரப்பெற்ற அனைத்து ஒப்பந்தப் புள்ளிகளின் நகல்கள், மதிப்பீடு நகல்கள், தரச்சான்று நகல், நகராட்சி மன்ற தீர்மான நகல்கள் போன்ற ஆவணங்களின் நகல்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

9. எனவே, மேற்குறிப்பிட்ட வாக்குமூலங்கள், ஆவணங்கள், அறிக்கைகள், சான்றுகள் மற்றும் புகைப்பட ஆதாரங்கள் பரிசீலிக்கப்பட்டு நகராட்சி தரப்பிலான விளக்கங்களை ஏற்று இம்முறையீட்டு மனு மீதான மேல் நடவடிக்கை கைவிடப்படலாமெனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 9-ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை-600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

3/2/2017

செயலாளர்.

3.2.17

3/2/17

பெறுநர்:

1. திரு. K.செந்திலாபதி,
   368, பெரிய கடை பஜார்,
   இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் – 626 117.

2. நகராட்சி ஆணையர்,
   இராஜபாளையம் நகராட்சி,
   இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் – 626 117.

3. திருமதி. P.S.தனலட்சுமி,
   க/பெ. P.B. செல்வசுப்பிரமணியராஜா,
   முன்னாள் நகர் மன்றத் தலைவி,
   P/1067, மாடசாமி கோவில் தெரு,
   இராஜபாளையம், விருதுநகர் மாவட்டம் – 626 117.